**தலைப்பு 261 - காலி மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன காலி மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 261 – காலி மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 13 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும்

இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக காலி மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் ஏற்பாடுகள் | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் | 1. | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை. | 2.9.1, 2.4 |
| | | 2. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அலுவலகங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.9.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 3. | பூரணமற்ற முறையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்தல் | 2.3.1 |
| | | 4. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.5 |
| | | 5. | முகாமைத்துவ நலிவுகள் | 2.8 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | 1. | இணக்கமின்மைகள் | 2.13 |
| | | 2. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமை | 2.12 |
| 128(1)(ஐ) | அரச பணிகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்றிறன், சரியான தன்மை மற்றும் நேர்மை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி திணைக்களத்தின் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | 1. | செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடல் | 2.3.2(அ) |
| | | 2. | செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.3.2(ஆ) |
| | | 3. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையப்பெறாத செயற்திட்டங்கள் | 2.3.2(இ) |
| | | 4. | கட்டுநிதிக் கணக்கு | 2.11 |
| | | 5. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.9.2 |
| | | 6. | தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| | | 7. பதவியணியை பயிற்றுவிப்பதிலான குறைபாடுகள் | 2.14(இ) |
| 128(1)(எ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | நிலுவைக் கடன் மீதி | 2.10 |
| 128(1)(ஏ) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், அலட்சியம், தவறு அல்லது மோசடியின் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணங்கள் 103 இலிருந்து 108 வரையான பிரமாணங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதுவும் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் / ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு மிகை அறவீடுகள் விதிக்கப்படுகின்றன என்பதுவுமாகும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.6 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 காலி மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) தொகுதிகள் மற்றும் கிராம மட்டத்தில் பிரதேச செயலகங்களினால் அரசின் பணிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கும் உரிய கொடுப்பனவுகளுக்காக வருமானங்களை சேகரித்தல்.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகளாக செயற்பட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் மற்றும் வருமானங்களை சேகரித்தல்.

(இ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டம் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நடைமுறைப்படுத்தல் மற்றும் அதற்குரிய கொடுப்பனவுகள்.

(ஈ) மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்காக தேவையான போது பங்குபற்றல் மற்றும் அதன்போது மேற்கொள்ளப்பட வேண்டிய வருமானம் சேகரித்தல் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள்

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்

மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
|---|---|---|
| பிரதான செயலகம்<br>(i) காலி - கடவத்சதர<br>(ii) போப்பே - போத்தல<br>(iii) அகமீமன<br>(iv) எல்பிட்டிய<br>(v) நியாகம<br>(vi) நாகொட<br>(vii) வெலிவிட்டிய - திவிதுர<br>(viii) பத்தேகம<br>(ix) இமதுவ<br>(x) கோனபீனுவல<br>(xi) நெலுவ<br>(xii) தவலம<br>(xiii) கரன்தெனிய<br>(xiv) ஹிக்கடுவ<br>(xv) அம்பலன்கொட<br>(xvi) பெந்தோட்ட<br>(xvii) யக்கலமுல்ல<br>(xviii) பலபிட்டிய<br>(xix) ஹபராதுவ | 1992 இன் 58 ஆம் இலக்க அதிகாரங்களை கையளிக்கும் (பிரதேச செயலாளர்கள்) அதிகாரச்சட்டம் | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல். |

## 2.3 செயலாற்றல்

### 2.3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மாவட்ட செயலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 19 சட்டவாக்க நிறுவனங்களின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு நிறைவேற்றப்படும் விதத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல்**

மாவட்ட செயலகத்தினால் பிரதான கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கிடையே ரூபா

9.918 மில்லியன் பெறுமதியான ஆறு செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தது.

**(ஆ) செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலான குறைபாடுகள்**

மாவட்ட செயலகத்தினால் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i). பெந்தொட்ட பிரதேச செயலாளர் அலுவலகம்

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 04 கிராம சேவகர் பிரிவுகளில் 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் நிதியேற்பாடுகளின் மூலம் ரூபா 5,733,435 செலவில் 04 சனசமூக மண்டபங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதன்போது செயற்திட்டங்களை தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அளவிடைகளின் ஒன்றாக அந்த செயற்திட்டத்திற்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எல்லையினுள் மேற்கொள்ளக்கூடிய செயற்திட்டங்கள் இனங்காணப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பில் கருத்திற் கொள்ளாது இந்த கட்டிடங்களின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களுக்கான நிதி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிராமையால் 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் இந்த கட்டிடங்கள் பயன்படுத்த முடியாதிருந்தது.

(ii). அக்மீமன பிரதேச செயலாளர் அலுவலகம்

- 2016 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகத்தினால் வழங்கிய நிதியினை ஈடுபடுத்தி பிரதேச செயலாளர் அலுவலக புதிய கட்டிட வளாகத்தை சுற்றிலும் சுமார் 185.8 மீட்டர்கள் கனஅடி கொண்ட அச்சுக் கற்களை பதிப்பதற்காக ரூபா 633,300 தொகை மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மதிப்பிடப்பட்ட அமைப்புக் குறிப்பீடுகளுக்கு முரணாக நியமமொன்றின்றி பணி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 165,163 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

- 2017 ஆம் ஆண்டின் போது இந்தக்கட்டிடத்தை சுற்றிலும் எஞ்சிய பகுதியில் 712.5 கனஅடி அளவான அச்சுக் கற்களை பதிப்பதற்காக ரூபா 2,884,000 தொகையான நிதியேற்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது. அதற்காக விலைக்கேள்வி கோரப்படாது புதிய கட்டிடத்தை நிர்மாணித்த ஒப்பந்ததாரருக்கே வழங்குவதற்கு மாவட்ட பெறுகைகள் குழு தீர்மானித்திருந்தது. அதற்கமைய பதிக்கப்பட்டிருந்த அச்சுக் கற்களின் அமுக்க சக்தி தொடர்பாக பரிசோதனையின் போது மாதிரிக்காக பயன்படுத்திய 06 அச்சுக் கற்களிலும் உரிய அழுத்தச் சக்தியை அண்மித்திருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய

நியமமொன்றில்லாது இந்த செயற்திட்டத்திற்காகவும் ஒப்பந்தகாரர் கோரிய அலகு விலைகளுக்கமையவே வேலைப் பெறுமதி மற்றும் பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக ரூபா 2,810,678 செலுத்தப்பட்டிருந்தது.

(iii). ஹபராதுவ பிரதேச செயலாளர் அலுவலகம்

---

- கொக்கல மோதரகொட வடிகாலமைப்பினை தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான 270 அடி, நீளம் 1.8 அடி அகலம் மற்றும் 1.17 அடி உயரம் கொண்ட இந்த வடிகால் கட்டமைப்பினை நிர்மாணிப்பதற்காக ரூபா 525,000 பெறுமதியான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ரூபா 515,492 வேலைப் பெறுமதியின் கீழ் முதியோர் அமைப்பொன்றுடன் 2017 நவம்பர் 01 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு 2017 திசெம்பர் 06 ஆந் திகதி பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

- வடிகாலினை நிர்மாணிக்கும் போது தரை மட்டத்திற்கமைய நீரினை வடிந்தோடச் செய்வதற்காக எடுக்கக்கூடிய ஆகக் கூடிய தூரம் 125 அடிகள் என தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெளியிட்டிருந்த போதிலும், வேலைகளை திட்டமிடும் போது வடிகாலினை நிர்மாணிக்கக்கூடிய ஆகக்கூடிய தூரம் சரியாக இனங்காணப்படாது மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டமையால் அது மிகை மதிப்பீடொன்றாக இருந்தது. அதற்கமைய மதிப்பீட்டு பெறுமதியில் 53 சதவீதமான வேலை மேற்கொள்ளப்பட்டிராததுடன், செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் அதிகமான அளவினை பயன்படுத்த முடியாதிருந்தது.

- இந்த வடிகாலினை நிர்மாணிக்கும் நோக்கமானது மழை காரணமாக வீடுகளில் தேங்கும் நீரை தாழ்வான பிரதேசத்திற்கு வடிந்தோடச் செய்தலே ஆகும். எனினும், இந்த வடிகாலினை உயரமான பிரதேசத்திலிருந்து கீழ் நோக்கி பயணம் செய்யும் பிரதான வடிகாலுக்கு இணைக்கும் போது நீர் வழிந்தோடும் திசைக்கு திருப்பப்படாமையால் பிரதான வடிகாலில் ஓடும் நீரானது இந்த காணி வழியே மீண்டும் வடிந்தோடுவதால் அண்மிய வீடுகளுக்கு நீர் உட்புகுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையப்பெறாத செயற்திட்டங்கள்**

---

மாவட்ட செயலாளர் அலுவலகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பின்வரும் செயற்திட்டங்களின் நோக்கங்கள் நிறைவேறாது காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(i). ஹபராதுவ பிரதேச செயலாளர் அலுவலகம்

---

- 2015 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்

அத்தரகொட குறுகிய வாய்க்காலினை மீளமைக்கும் போது வாய்க்காலினை 275 மீட்டர்கள் ஆழப்படுத்தி இரு புறமும் கமுகு குற்றிகளை பொருத்தியமையால் ரூபா 338,725 தொகையான வேலைப் பெறுமதியுடைய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் 275 மீட்டர்கள் நீளமான தூரத்திற்கு புனரமைப்பு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 285 மீட்டர்கள் நீளம் மாத்திரம் புனரமைக்கப்பட்டிருந்தது.

- இந்த வாய்க்காலினை நிர்மாணிப்பதற்கான பிரதானமான நோக்கமானது பழைய வயல்களில் அறுவடை செய்தலே எனினும், வாய்க்கால் புனரமைக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அந்த வயல்களில் அறுவடை இடம்பெற்றிராததுடன் வாய்க்காலில் இருபுறமும் புற்கள் அடர்ந்து பாவனைக்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியருந்தது.

(ii). அம்பலந்தொட்ட பிரதேச செயலாளர் அலுவலகம்

------------------------------------------------------------------------------------

புரன் வயல்களில் அறுவடை செய்யப்பட்ட விளைச்சலினை அதிகளவில் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கமைய 1,135 மீட்டர்கள் நீளமான பத்தரமுல்ல வாய்க்காலினை புனரமைப்பதற்காக ரூபா 472,007 தொகையான வேலைப் பெறுமதியின் கீழ் மெட்டிவல பரபே கிராம அபிவிருத்தி சங்கத்துடன் 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2017 திசெம்பர் 21 ஆந் திகதி பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2018 மே 22 ஆந் திகதி கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது இந்த வாய்க்காலானது தொடக்கத்திலிருந்து சுமார் 200 மீட்டர்கள் அளவான பகுதியில் புற்கள் அடர்ந்து காணப்பட்டதுடன், நீரானது போதியளவில் வடிந்தோடுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. புரன் வயல்களை அறுவடை செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமான போதிலும், கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் வயல்களின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி திட்டம் 2030 இன் பிரகாரம் அடையக்கூடிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அண்மிப்பதற்கான ஆயத்தம் தொடர்பில் பரிசோதனை செய்யும் போது மாவட்ட செயலகங்களினால் நிலைபேறான அபிவிருத்தி திட்டம் 2030 தொடர்பில் 2017 ஆம் ஆண்டினைப் போன்றே 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டு உதவி செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தால் உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி 12 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 2,918.5 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் அவசர இடர்கள் - வெள்ள

உட்கட்டமைப்பு வசதிகளின் மீள்கட்டமைப்பிற்காக வழங்கிய நிதியேற்பாட்டில் ரூபா 1,739.15 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடவத்சர பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் ஜோதிட வாசிகசாலையொன்றிற்காக கட்டிட பொருட்கள் மற்றும் வாசிகசாலை புத்தகங்களுக்காக ரூபா 1,350,000 செலவிடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i). இந்த வாசிகசாலையானது மூன்று மாடிகளைக் கொண்ட தனியார் கட்டிடமொன்றின் இரண்டாம் தளத்தில் சுமார் 600 கனஅடி அளவான வளாகத்தினுள் அமைந்திருந்ததுடன், அந்த வாசிகசாலை வளாகத்தின் அளவுக்கு தேவையானதை விட அதிகமான கட்டிடப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii). இந்த வாசிகசாலை உள்ளடங்கலாக தன்னார்வ அமைப்பு நடாத்திச் செல்லப்பட்டிருந்த கட்டிடம் மற்றும் காணியானது 2015 ஆம் ஆண்டின் போது வேறொரு நபருக்கு விற்கப்பட்டிருந்ததுடன், தற்போது அதில் மற்றுமொரு வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய பொதுப் பணியொன்றிற்காக அரசினால் வழங்கப்பட்ட மானியங்களை பிரத்தியேக பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 2.6 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கரந்தெனிய பிரதேச செயலாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரால் போலியான கையொப்பமிடப்பட்டு 2006 செப்தெம்பர் 05 ஆந் திகதி ரூபா 815,650 தொகையான காசோலை மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த நட்டம் ஏற்பட்டு 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த நட்டத்தினை மீளாய்வாண்டின் போதும் அறவிட முடியாதிருந்தது.

(ஆ) அம்பலங்கொட பிரதேச செயலாளர் அலுவலகத்தின் வாகனமொன்றிற்கு 2001 யூன் 26 ஆந் திகதி ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பில் காலி மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கிற்குரிய குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து ரூபா 130,168 நட்டத்தினை மீளாய்வாண்டின் போதும் அறவிடமுடியாது போயிருந்தது.

## 2.7 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக அலுவலகத்தால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 3.1(அ)(ii) | வீதியினை கம்பளமிடுவதற்காக 2011 மற்றும் 2013 ஆகிய வருடங்களின் போது இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 27 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 139,333,203 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 3.4.2(இ) | (i). பட்டபொல மாவட்ட வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக தொழிலாரம்பிப்பு முற்பணம், மதியுரை சேவைக் கட்டணங்கள் மற்றும் பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக் கட்டணம் போன்றவற்றுக்காக ரூபா 1,440,507 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராத போதிலும், செலுத்தப்பட்ட முற்பணத் தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii). அம்பலங்கொட கஹட்டபிட்டிய விளையாட்டு மைதானத்தை புனரமைக்கும் செயற்திட்டத்திற்காக தொழிலாரம்பிப்பு முற்பணம், மதியுரை சேவைக் கட்டணங்கள் மற்றம் பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக் கட்டணங்களை ரூபா 1,325,945 தொகை செலிடப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இதன் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்ததுடன், மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் 20 சதவீதமான பணிகளேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | 3.8 | 1999 ஆம் ஆண்டின் போது கிராமங்களை விஸ்தரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய 467 ஏக்கர்கள் 1 ரூட் 26 பேர்ச் பரப்பளவான எப்தொப் வத்த காணியை சுவீகரிக்கும் பணிகள் அளவான காணி குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், மேலும் 01 ஏக்கர் 58 பேர்ச் பரப்பளவான காணி நோக்கத்திற்கு புறம்பாக ஹோட்டல் பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. காணிகள் கைப்பற்றப்பட்டு 18 வருடங்கள் கடந்திருந்த |

போதிலும், செயற்திட்டத்தின் பணிகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிராததுடன், அந்த காணிகள் அத்துமீற குடியிருப்போரின் கீழ் காணப்பட்டது. தெற்கு அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,585,625 பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.8 முகாமைத்துவ பலவீனம்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்ட செயலாளர் அலுவலகம்

(i). 2017 ஆம் ஆண்டு மே மாதம் நிலவிய சாதகமற்ற காலநிலை காரணமாக “வெள்ளத்தினால் மற்றும் மண்சரிவுகளால் அழிவிற்குள்ளான பிரதேசங்களை புனரமைத்தல் மற்றும் மீளமைக்கும் பணிகளை துரிதப்படுத்துவதற்காக சலுகைகளை வழங்கும் பொறிமுறை” எனும் தலைப்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கிடைத்த அங்கீகாரத்திற்கமைய ரூபா 1,995 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- இது தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டிருந்த 2017 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய MNPEA 04/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடையே அனைவருக்கும் சமமான வாய்ப்பு கிடைக்கும் வகையில் ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், ஒப்பந்தங்களை கையளிக்கும் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

- அனைத்து நிதியேற்பாடுகளும் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 255.67 மில்லியன் மாகாண சபை வீதி புனரமைப்பிற்கான ஒப்பந்தத்திற்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடனும், ரூபா 828.38 மில்லியன் பெறுமதி தேசிய வீதி புனரமைப்பு ஒப்பந்தத்திற்காகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் ஒப்பந்ததாரர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டிருந்தன. தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய வீதிகளுக்குரிய மதிப்பீடுகளைத் தயாரித்தல் அந்த அதிகாரசபையாலும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த மதிப்பீடுகளின் சரியான தன்மையானது சுயாதீன நிறுவனமொன்றினால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உடன்படிக்கையின் பிரகாரம் மேற்பார்வை மற்றும் தொழில்நுட்ப

ஆலோசனை தொடர்பான முழுப்பொறுப்பும் முதலாம் தரப்பினரிடம் (மாவட்ட செயலாளர்) காணப்பட்ட போதிலும், உரிய மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டடைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய சில வீதிகளை அமைத்தல் பல்வேறு கட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு ஒரே ஒப்பந்தகாரருக்கு ஒரு தடவையில் கையளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

- புரிந்துணர்வு உடன்படிக்கையின் 6 ஆம் பிரிவிற்கமைய செயற்திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் தொழில்நுட்ப மதியுரைகள் தொடர்பான முழுப்பொறுப்பும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ள போதிலும், அதிகாரசபை ஒப்பந்தக்காரராக செயற்படுகின்றமையால் அதன் மேற்பார்வை சுயாதீனமான தரப்பொன்றினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 5 செயற்திட்டங்களின் ஒப்பந்த நடவடிக்கைகள் 2018 சனவரி மாதமளவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, 12 செயற்திட்டங்களின் ஒப்பந்த பணிகளில் பூர்த்தி செய்த சமவீதமானது 25 சதவீதத்திற்கும் குறைவான பெறுமதியினைக் கொண்டிருந்தது.

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீதி புதுப்பிக்கும் செயற்திட்டங்களிடையே துரித பொறிமுறையினூடாக நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்திட்டமில்லாத, சாதாரண பெறுகை நடைமுறையினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன. இவ்வாறு வீதிக்காக மதிப்பீடுகளை தயாரிக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் விலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. நடைமுறைப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரர்களால் விநியோகிக்கப்பட்டு இழையப்பட்ட அஸ்பலட் கபடையிலிருந்து பெறப்பட்ட அளவீடுகளை அடிப்படையாகக் கொள்வதற்கு பதிலாக, மதிப்பீட்டின் கூறு விலைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையின் காரணமாக ரூபா 4,869,808 தொகை கூடுதலாக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு அஸ்பலட் கோஸ்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது வெட்டப்பட்ட மாதிரிகளின் காணப்பட்ட சாதாரண நிலைமையின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமையால் 7 பணிகளுக்காக ரூபா 2,487,893 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அஸ்பலட் படையின் கெட்டித்தன்மை (Compaction) அங்கீகரிக்கப்பட்ட சதவீதத்தை விட குறைவான சந்தர்ப்பங்களிலும் அது தொடர்பில் கவனத் செலுத்தாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) நெலுவ பிரதேச செயலாளர் அலுவலகம்

-------------------------------------------------------------------

(i). பட்டுவங்கல குருந்துவத்த காணியானது 07 ஏக்கர் பரப்பளவினை கொண்டிருந்ததுடன், கிராமங்களை விஸ்தரிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணியற்றோருக்கு பகிர்ந்தளிக்கும் நோக்கில் அரசிற்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகள் இறுதிவரையிலும் காணிகளுக்கு உரித்தானவர்களை இனங்காணும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இங்க காணிகள் 52 துண்டுகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 42 காணித்துண்டுகள் 2003 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் மாதமளவில் அந்த காணித் துண்டுகளின் 23 காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii). தவலம – நெலுவ – பட்டுவங்கல வீதியின் 9/5 ஆம் இலக்க பாலத்தினை மீள நிர்மாணிப்பதற்காக 0.1316 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியை கைப்பற்றும் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தன. காணிகளை சுவீகரிக்கும் அதிகாரச்சட்டத்தின் 38(அ) இடைக் கட்டளை 2014 மார்ச் 10 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்ததுடன், 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதியளவில் பாலத்தின் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அன்றளவிலும் அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவிற்கமைய காணி உரிமையாளர்களை இனங்காணப்பட்டு காணிகளை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii). வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழான பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமொன்றை நடாத்திச் செல்வதற்காக ஹிங்குருவ நகரில் அமைந்துள்ள 48.946 ஹெக்டேயர்கள் பரப்பளவான கிரிமானக்கெட்டிய எனும் அரசிற்கு சொந்தமான காணியை சுவீரிக்கும் பணிகள் 1996 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதுவரையிலும் சுமார் 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும், உரித்துப் பரிசோதனைகளை மேற்கொள்ளல், நட்டஈடு செலுத்துதல், காணியின் உரித்தினை கையளித்தல் போன்ற நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தாமதத்துடன் காணப்பட்டது.

(iv). 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது நிலவிய காணி கச்சேரி முறைமையின் பிரகாரம் இனங்காணப்பட்ட காணியற்றோரின் எண்ணிக்கை 1,464 ஆக இருந்ததுடன், அந்த நபர்களுக்கு இதுவரையிலும் காணிகளைப் பெற்றுக்கொடுக்க முடியாதிருந்தது. காணி கச்சேரிகளின் மூலம் இனங்காணப்பட்டிருந்த அத்துமீறி கைப்பற்றப்பட்டிருந்த 20 பேர்ச் முதல் 82 பேர்ச்களுக்கு இடைப்பட்ட அளவினைக் கொண்ட 19 காணித்துண்டுகள் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் 14 காணிகள் மாகாண காணி ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

மேலும் 04 காணித்துண்டுகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கரந்தெனிய பிரதேச செயலாளர் அலுவலகம்
---

(i). பொரகந்த கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குரிய 5 ஏக்கர்களும் 1 ரூட் 1 பேர்ச் கொண்ட புன்சி பொரகந்த வத்த காணியானது ரீ.டீ.சமரவீர விளையாட்டுத் திடலினை நிர்மாணிப்பதற்காக 2006 ஆம் ஆண்டின் போது அரசினால் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. காணிகளை சுவீகரிப்பதற்காக காணிகளை சுவகரிக்கும் அதிகாரச்சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவுகளிற்கமைவான அறிவித்தலானது 2007 பெப்ரவரி 26 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரியதாக தயாரிக்கப்பட்ட பிரகாரமான உப பதிவேட்டில் கைப்பற்றுவதற்கு உத்தேசித்துள்ள காணியின் அளவானது 0.285 ஹெக்டேயர்களாக குறிப்பிடப்பட்டிருந்தமையால், அதனை அடிப்படையாகக் கொண்டு 2007 திசெம்பர் 31 ஆந் திகதி குறித்த காணிகளை கைப்பற்றும் அதிகாரச்சட்டத்தின் 38(அ) இடைக் கட்டளை வெளியிடப்பட்டிருந்தது. அதற்கமைய சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த காணியின் அளவினை விட குறைவானதொரு அளவு குறிப்பிடப்பட்ட 38(அ) இடைக்கட்டளை பிரசுரிக்கப்பட்டமையால் குறித்த காணித்துண்டுகள் அந்தந்த அரச நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் சிக்கலானதாக இருந்தது. இது தொடர்பில் காணிகள் அமைச்சினால் 2015 யூலை 28 ஆந் திகதி பிரகாரமான உபபட்டோலையினை திருத்தியமைத்து முன்வைக்குமாறு கோரப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2017 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் அந்த ஆலோசனை கிடைத்து 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). கரந்தெனிய நகர அபிவிருத்திக்காக மஹளுதன்ட கிராமத்தில் பரவை எனும் பெயருடைய காணியொன்றின் சுமார் 02 ஏக்கர்கள் அளவானது கரன்தெனிய பிரதேச சபைக்கு வழங்கும் நோக்கில் 1986 ஆம் ஆண்டின் போது அரசிற்கு சுவீகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. காணிகளை சுவீகரிக்கும் போது நட்டஈடு கிடைக்க வேண்டிய 05 நபர்களுக்கு ரூபா 960,000 தொகையான நட்டஈடு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், காணிகளின் உரித்து தொடர்பில் நிலவிய நிச்சியமற்ற தன்மைகள் காரணமாக நட்டஈட்டுத்தொகைகள் நீதிமன்றத்தில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது. பிரதேச சபையிலிருந்து உரிய முறையில் பணம் கிடைக்காத காரணத்தால் நட்டஈட்டினை செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டமையால் மேலதிக வட்டியினை செலுத்த நேர்ந்திருந்தது. கைப்பற்றப்பட்ட காணியில் கரந்தெனிய பிரதேச சபையினால் அபிவிருத்தி மேற்கொண்டு வருமானம் ஈட்டப்படுகின்ற போதிலும், காணிகளை இழந்தோர் தமது காணிகளுக்காக பல வருடங்களாக எவ்விதமான நலனையும் பெற்றிருக்கவில்லை.

(ஈ) பெந்தொட்ட பிரதேச செயலாளர் அலுவலகம்

(i). 2006 ஆம் ஆண்டின் போது 03 சுனாமி கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டு அநாதரவற்றோருக்கு 74 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 66 வீடுகளுக்கான உரித்து தீர்வு செய்யப்பட்டு உரிய நலனாளிகளுக்கு உரித்துறுதிகளை வழங்குவதற்கு 2017 ஆகஸ்ட் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மிரிஸ்வத்த, மஹாகுருந்த, கெமுனுபுர சுனாமி கிராமங்களில் 15 வீடுகளில் 08 வீடுகளுக்குரிய உரிமையாளர்கள் இந்த வீடுகளை வேறு தரப்பினருக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கியிருந்தனர். செயற்திட்டத்தின் 04 வீடுகள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அவற்றுள் 02 குடியேறுவதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது.

- நெலும் பொக்குண U.S.A வீடமைப்பு கட்டிடத்தொகுதி மற்றும் பாரமிதா வீடமைப்புத் தொகுதியின் 49 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு, அவற்றுள் 13 வீடுகள் சுனாமி பேரழிவிற்கு உள்ளாகாத நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கிராம சேவகர் அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த வீடமைப்புத் தொகுதியின் 03 வீடுகள் வேறு தரப்பினருக்கு விற்கப்பட்டிருந்தன.

(ii). பெரடைஸ் ஐலன்ட், மீனவர் வீதி, பெந்தொட்ட எனும் முகவரியில் ப்ளோடீன் ரெஸ்டுரன்ட் எனும் பெயரில் நடாத்திச் செல்லப்படும் நீரனி மேல் மிதக்கும் உணவகம் தனிநபர் வியாபாரமொன்றாக 2012 ஆம் ஆண்டின் பெப்ரவரி 03 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. வியாபார ஸ்தலத்தினை நடாத்திச் செல்லும் இடத்தினை மாற்றுதல் மற்றும் எதிர்ப்புக்களை கவனத்திற் கொண்டு 2012 நவம்பர் மாதத்தின் போது அந்த பதிவு இரத்துச் செய்யப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் எந்தவொரு அனுமதிப்பத்திரமும் இல்லாது இந்த மிதக்கும் உணவகத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களால் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஹபராதுவ பிரதேச செயலாளர் அலுவலகம்

(i). தனியார் ஆமை பாதுகாப்பு நிலையமொன்றினை நடாத்திச் செல்வதற்காக கொக்கல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மோதர வெல்லவத்த எனும் பெயருடைய அரச காணியொன்றின் 10 பேர்ச் நீண்ட கால குத்தகை அடிப்படையில் நபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

- அது தொடர்பில் பிரதான செயலாளரால் தென் மாகாண காணிகள் ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக்கமைய ஹபராதுவ பிரதேச

சபை, கடலோர பாதுகாப்பு திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு ஆகிய நிறுவனங்களின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தனியார் ஆமைகள் நிலையமொன்றிற்காக அங்கீகாரம் வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ள போது, வனசீவராசிகள் பாதுகாப்பு அமைச்சன் செயலாளரின் இலக்கமிடப்படாத அங்கீகாரம் வழங்கும் கடிதத்திற்கமைய காணிகள் ஆணையாளர் நாயகத்தினால் நீண்டகால குத்தகை அடிப்படையில் 30 வருட காலத்திற்கு இந்த காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

- 2009 இன் 22 ஆம் இலக்க விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 45(இ) பிரிவின் கீழ் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள அல்லது அழிவடைந்து செல்வதற்கு சாத்தியமுடைய விலங்கினங்களின் புனர்வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்காக அதிகாரமானது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினாலேயே வழங்கப்பட வேண்டும். எனினும், அவ்வாறு அதிகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

- இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது, வழங்கப்பட்டிருந்த அரச காணிக்கு மேலதிகமாக அதற்கு அருகாமையில் காணப்பட்ட அரச காணியொன்றும் அத்துமீறி காவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) அம்பலந்தொட்ட பிரதேச செயலாளர் அலுவலகம்

---

03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குரிய 93.42 ஹெக்டேயர் பரப்பளவான காணித் துண்டொன்று அம்பலாங்கொட நகர அபிவிருத்திக்காக அம்பலாங்கொட நகர சபையின் தேவையின் அடிப்படையில் 1988 செப்தெம்பர் 23 ஆந் திகதிய 524/23 ஆம் இலக்க வர்த்தமானியில் காணிகளை சுவீகரிப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் 38(ஆ) இடைக்கட்டளையினை வெளியிடப்பட்டமையின் மூலம் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. இதுவரையிலும், காணிகள் சுவீகரிக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அந்தக் காணிகளில் 65 ஹெக்டேயர்கள் அளவான காணிக்கான உரித்து பரிசோனை மேற்கொள்ளப்பட்டு நட்டஈடு செலுத்தி முடிக்கப்பட்டிருக்கவில்லை. உரித்து பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டிருந்த சுமார் 13.19 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணிக்காக ரூபா 19.72 மில்லியன் நட்டஈட்டுத்தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், காணி உரிமையாளர்களுக்கு அந்த பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. நீண்டகாலமாக நட்டஈடு செலுத்துதல் தாமதமடைந்தமையால் காணி உரிமையாளர்கள் அசளகரியத்திற்கு உள்ளாகியிருந்தனர். அவ்வாறே 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் காணி உரிமையாளர்களுக்கு செலுத்துவதற்கு நேரும் வட்டியானது ரூபா 13.78 மில்லியனாக இருந்தது. மேலும், கைப்பற்றப்பட்ட மொத்தக் காணியில் 81.11 ஹெக்டேயர்கள் பரப்பளவான

காணியானது எதிர்பார்க்கப்பட்ட விளைவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2.9.1 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| **2013** | மீண்டுவருபவை | 1,014.98 | 1,007.6 | 7.38 | 0.73 |
| | மூலதனம் | 60.76 | 60.06 | 0.69 | 1.14 |
| | **மொத்தம்** | **1,075.74** | **1,067.66** | **8.07** | **0.75** |
| **2014** | மீண்டுவருபவை | 890.58 | 884.42 | 6.16 | 0.69 |
| | மூலதனம் | 45.80 | 45.62 | 0.18 | 0.39 |
| | **மொத்தம்** | **936.38** | **930.04** | **6.34** | **0.67** |
| **2015** | மீண்டுவருபவை | 1,042.30 | 1,037.71 | 4.9 | 0.44 |
| | மூலதனம் | 78.00 | 47.28 | 30.72 | 39.38 |
| | **மொத்தம்** | **1,120.30** | **1,084.99** | **35.31** | **3.15** |
| **2016** | மீண்டுவருபவை | 1,079.00 | 1,074.73 | 4.27 | 0.39 |
| | மூலதனம் | 78.00 | 77.19 | 0.81 | 1.04 |
| | **மொத்தம்** | **1,157.00** | **1,151.92** | **5.08** | **0.43** |
| **2017** | மீண்டுவருபவை | 1,074.71 | 1,068.79 | 5.92 | 0.55 |
| | மூலதனம் | 2,120.20 | 380.56 | 1,739.64 | 82.05 |
| | **மொத்தம்** | **3,194.91** | **1,449.35** | **1,745.56** | **54.63** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி பயன்படுத்தப்படாமை**

மீளாய்வாண்டின் போது வெள்ளம் மற்றும் மண்சரிவு இடங்கள் காரணமாக சேதத்திற்குள்ளான உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைப்பதற்காக ஆண்டில் இறுதியில் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் சாத்தியவளக் கற்கைக்கு, பெறுகைகளுக்காக மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான காலம் இல்லாதிருந்தமையால் நிதியேற்பாடுகளை பயன்படுத்த முடியாதிருந்தமையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,995.2 மில்லியன் மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 248.44 மில்லியன், அதாவது 12 சதவீதம் எவ்வித செயற்திட்டத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.9.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய மாவட்ட செயலகங்கள் என்பவற்றால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

---

26 ஏனைய அமைச்சுக்கள், 20 திணைக்களங்கள் மற்றும் 02 அலுவலகங்கள் என்பவற்றால் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 3,531.75 மில்லியன், ரூபா 268.49 மில்லியன் மற்றும் ரூபா 41.75 மில்லியன் எனுமாறு ரூபா 3,841.99 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றுள் ரூபா 2,799.75 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,042.23 மில்லியன் அல்லது 27.13 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இடர் முகாமைத்துவ அமைச்சினால் தேசிய இடர்கள் நிவாரண சேவைகள் நிலையத்தினால் இடர்கள் நிவாரண தகவல் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்காக காலி மாவட்டத்தின் 18 பிரதேச செயலகங்களுக்காக (தவலம பிரதேச செயலகம் நீங்கலாக) ரூபா 648,000 கூட்டுப்பெறுமதியுடைய மடி கணனிகள் உள்ளடங்கலாக 18 உபகரணத் தொகுதிகள் 2016 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தின் போது இடர்கள் நிவாரண உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும், அந்த கணனி உபகரண தொகுதிகளின் பாவனை தொடர்பில் முறையான பயிற்சியொன்று இடர்கள் நிவாரண உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக்கொடுக்காமையும் இந்த தகவல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்காக போதுமான இணையத்தள வசதிகள் பிரதேச செயலகங்களில் இல்லாதிருந்தமையாலும் தகவல்களுக்கு உட்புகுதல், தகவல்களை உட்செலுத்துதல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்க முடியாதிருந்தது.

(ஆ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் காலி மாவட்டத்தின் வதுகெதர - சீனிகொட வீதி மற்றும் வித்தியா சமாதி பிரிவேனா அருகிலுள்ள வீதியின் புதுப்பிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உரிய ஒப்பந்தகாரருக்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 1,991,716 செலுத்தப்பட்டுள்ள போதிலும், ஒப்பந்ததாரரிடம் முறைப்படி வரிப் பட்டியல்கள் பெற்றுக்கொண்டிராததுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வரித்தொகை செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் காலி மாவட்டத்தின் 3 பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்குரிய 10 கிராமிய வங்கிகளில் கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் 682 நலனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 20,930,093 தொகையான கடன் மீதிகள் காலங்கடந்த கடனாக இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டன.

(ஈ) தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் காலி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிப்பிற்குள்ளான பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்காக ரூபா 400 மில்லியன் தொகை காலி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 291.24 மில்லியன் 202 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக காலி

கடவத்சர பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த பணத்தில் ரூபா 240.44 மில்லியன் பெறுமதியான 199 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ரூபா 45.05 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 69 செயற்திட்டங்கள் மாத்திரம் 2018 சனவரி 05 ஆந் திகதியளிவல் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. ரூபா 32.85 மில்லியன் பெறுமதியுடனான 27 செயற்திட்டங்களின் ஒப்பந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 162.54 மில்லியன் பெறுமதியுடைய 103 செயற்திட்டங்களின் ஒப்பந்த நடவடிக்கைகள் 2018 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளினூடாக இமதுவ பிரதேச செயலகத்திற்குரிய இந்துரன்வில கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஜம்புகஹவத்த அத்தம் வீட்டு வீதிக்கு தாரிடல், வடிகால் கட்டமைப்பினை நிர்மாணித்தல், சுரங்கங்களை நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,523,576 ஆக இருந்ததுடன், பிரிவில் அமைந்துள்ள சனசமூக சங்கமொன்றுடனான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், வேறு வெளிவாரி நபர்களால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், பணியில் நிலவும் குறைபாடுகள் தொடர்பான பொறுப்பு ஒப்பந்ததார சங்கத்தினால் பொறுப்பேற்கப்படவில்லை. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i). மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 22 இன் பிரகாரம், கம்பியிடப்பட்ட 1:2:4 (3/4) விகிதம் கலவையுடனும் பூசப்பட்ட வெளிப்புறத்துடனான 24.7 கன மீட்டர்களுடனான கொங்கிறீட் தளத்துடனான வடிகாணினை நிர்மாணிக்க வேண்டிய போதிலும், பின்வரும் குறைபாடுகள் காணப்பட்ட போது ஒப்பந்ததாரருக்கு ரூபா 847,806 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- நிலத்திற்கு போடப்பட்டிருந்த கொன்கிறீட் பழுதடைந்திருந்ததுடன் உடைந்து போயிருந்தது.
- வடிகாலின் சுவர்கள் ஆங்காங்கே உடைந்திருந்தன.
- கொன்கிறீட் படையின் வலுவானது உரிய பெறுமதிகளில் நிலவுகின்றதா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii). மதிப்பீட்டின் இலக்கம் 9 முதல் 18 வரையான வேலை விடயங்களின் பிரகாரம் பெட்டி கால்வாய்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 186,341 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு, அவற்றுள் 11 ஆம் இலக்க வேலை விடயங்களின் பிரகாரம் அடியினை நிர்மாணிப்பதற்காக 1:2:4 (3/4) விகிதக் கலவையுடனான 0.86 கன மீட்டர்கள் அளவான கொங்கீறீட் படையொன்றினை இடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த வேலை விடயம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வடிகாணில் இடம்பெற்றிருந்த 1.30 மீட்டர்கள் நீளமான கொங்கீறீட் பலகை பல இடங்களில் வெடிப்பிற்குள்ளாகியிருந்தது.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

மாவட்ட செயலகத்திற்குரிய 26101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 86.00 | 85.74 | 57.00 | 66.77 | 235.00 | 219.22 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 1,446,210 ஆக இருந்தது. 2018 யூலை 31 ஆந் திகதி அளவில் அந்த மீதியானது ரூபா 600,310 ஆக இருந்ததுடன் அந்த மீதிகள் 01 இலிருந்து 06 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக நிலுவையாக காணப்பட்டது.

## 2.11 கட்டுநிதிக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழான கட்டுநிதிக் கணக்கில் 2006 ஆம் ஆண்டு முதுல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 0.19 மில்லியன் மீதியானது 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 435.71 மில்லியனாகும். அவற்றுள் 02 ஆண்டுகளை மிகைத்த (காணி வைப்புக்கள் நீங்கலாக) ரூபா 170.7 மில்லியன் தொகையான 339 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| | நிதிப்பிரமாணம் 104 (4) | 525,738 | ஆண்டினுள் இடம்பெற்ற 07 வாகன விபத்துகளுக்குரியதாக தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் 2018 ஏப்ரல் 03 ஆந் திகதி வரையிலும் விபத்து இடம்பெற்று 03 மாதங்கள் முதல் 12 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் அறிவுரைக் கடிதம் | | |
| | 2015 யூலை 07 மற்றும் 2017 சனவரி 06 ஆந் திகதிகளின் BD/GPS/13/0/9/14/MC-ii மற்றும் MC-iii ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரைக் கடிதம் | 138,500 | உந்துருளியை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரொருவர் 05 வருடங்களுக்கு முன்னர் சம்பளமற்ற விடுமுறையிலோ அல்லது 06 மாதங்களுக்கு மேற்பட்ட சம்பளத்துடனான விடுமுறையினை பெற்றுக்கொண்டோ வெளிநாடு செல்வாராயின், உந்துருளியின் சந்தைப் பெறுமதி அறவிடப்பட வேண்டியதுடன், வெளிநாடு சென்றிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அந்தப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | 1,560,500 | உத்தியோகத்தர் ஒருவர் 05 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் உந்துருளி உரித்தற்ற பதவியொன்றிற்கு மாறிச் செல்லும் போது அல்லது இராஜினாமா செய்யும் போது, உந்துருளியின் சந்தைப் பெறுமதி அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான 10 உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு | 15,746,176 | ஒப்பந்ததாரர் பெறுமதி சேர் வரித் தொகையினை செலுத்தும் போது முன்வைத்திருந்த பற்றுச்சீட்டுக்களில் பெயர், முகவரி, திகதி, பற்றுச்சீட்டு இலக்கம் ஆகியவை உள்ளடக்கப்பட்டிராமையால் இந்த வரித் தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்தியதற்கான சான்றுப்படுத்தலை மேற்கொள்ள முடியாதிருந்தது. |

**2.14 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 925.4 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 312.003 ஆக இருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 105 | 83 | 22 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 44 | 27 | 20 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 2,849 | 2,677 | 214 | 42 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 183 | 173 | 10 | - |
| (v) | அமைய/ஒப்பந்தம் | - | 06 | - | 06 |
| | **மொத்தம்** | **3,181** | **2,966** | **266** | **51** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமை

---

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 266 வெற்றிடங்கள் நிலவின. மாவட்ட செயலகத்தினால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரித்த பதவியணியை மிகைத்து ஆட்சேர்த்தல்

---

முறையான அங்கீகாரமின்றி அங்கீகரித்த பதவியணியை மிகைத்து 51 பதவியணியினர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) பதவியணியினரை பயிற்றுவித்தல்

---

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடங்களினுள் ஆகக் குறைந்தது 08 மணித்தியாலங்களேனும் பெற்றிராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 185 ஆகும்.